2013 மே 6]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே 110 முழுநேரக் கடைகள் இருக்கின்றன. 76 கடைகள் சொந்தக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. முழுநேரக் கடைகளில் 33 கடைகள் வாடகைக் கட்டடத்திலே இருக்கின்றன. அதிலும் அதிகமாக ஆம்பூர் கற்பகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்துகிற 20 கடைகளில் 19 கடைகள் இடம் கிடைக்காததனாலே, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான வாய்ப்பு இல்லாததனாலே வாடகைக் கட்டடத்திலே இயங்குகின்றன. ஆக, உங்களுடைய தொகுதியிலே 33 கடைகள் மட்டுமே வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன. பகுதிநேரக் கடைகள் முழுவதுமே இலவசக் கட்டடத்தில் இயங்குகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை துறையின் மூலமாக ஆய்வு செய்து அதற்கான உரிய நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை ஆராய்ந்து, அதிவிரைவிலே அதுபற்றி துறையின்மூலம் கருத்துரு பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 399, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

399—

சாலை வசதி

*__20346__—__திரு. டி. இராமச்சந்திரன்:__**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தளி ஒன்றியம், உரிகம் முதல் பேல்பட்டி வரையுள்ள மலைக் கிராமங்களுக்குச் சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அஞ்செட்டி, உரிகம் முதல் உடுபராணி வரையுள்ள சாலை 5.00 கி.மீ. நீளம் உடையது. இச்சாலைக்கு

[2013 மே 6

உரிகம் காப்புக் காட்டில் 2.70 மீட்டர் அகலத்திற்கு அனுமதி உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தார்ச் சாலையாக மாற்ற வேண்டுமானால், 1.35 எக்டேர் வன நிலம் தேவைப்படும். 1.00 எக்டேருக்கும் கூடுதலாக வன நிலம் தேவைப்படுவதால், வன நில உரிமைச் சட்டம், 2006–ன்படி பிரேரணையை அங்கீகரிக்க இயலாது. இதற்கு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்படி மைய அரசினுடைய முன்அனுமதி பெறப்பட வேண்டும். மேலும், உரிகம் முதல் பிலக்கல் வழியாக பேல்பட்டி வரையுள்ள சாலையின் நீளம் 15.00 கி.மீ. இச்சாலைக்கு பிலிக்கல் காப்புக் காட்டில் 5.40 மீட்டர் அகலத்திற்கு அனுமதி உரிமம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இதனைத் தார்ச் சாலையாக அமைக்க வேண்டுமானால், பயனீட்டாளர் துறையான நெடுஞ்சாலைத் துறை அல்லது ஊரக வளர்ச்சித் துறையிடமிருந்து உரிய கருத்துரு கிடைக்கப்பெறும் பட்சத்தில் மைய அரசினுடைய முன்அனுமதி பெற தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி தொகுதி, தளி ஒன்றியம், உரிகம் மற்றும் பேல்பட்டி பகுதி அண்மையிலே நம்முடைய தமிழக அரசு அஞ்செட்டி ஒன்றியத்தை அமைத்துள்ளது. அது அந்தப் பகுதிக்குள் வருகிறது. ஏற்கெனவே, இந்தப் பகுதி வனப் பகுதியாக இருந்தாலும்கூட, மண் சாலையில் பாரம்பரியமாக மக்கள் போய் வந்துகொண்டிருக்கிறார்கள். புதியதாக நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இரண்டாவதாக, அந்தப் பகுதியிலே பெரும் மரங்களும் இல்லை. நீண்ட நெடிய காலமாக அந்த மக்கள் சாலை கோரி வருகிறார்கள். பல கிராமங்களுக்கு இந்த மலைச் சாலை வழியாகத்தான் செல்ல வேண்டும். அதையொட்டியுள்ள கர்நாடகப் பகுதிகளிலெல்லாம் தார்ச் சாலையாக ஆக்கப்பட்டு விட்டன. எனவே, இந்தச் சாலை அமைத்தால்தான் இந்தப் பகுதி மக்களுடைய பயன்பாட்டிற்கு வரும். நீண்ட நெடுங்காலமாக அனுமதிக்காக தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து ஏற்கெனவே பாதை போய்க்கொண்டிருக்கிற காரணத்தாலே, அதைச் சீர்படுத்தி சாலை*

2013 மே 6]

அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—25

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980—ன்படி, மைய அரசினுடைய முன்அனுமதி பெற்றே சாலை அமைக்க இயலும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய மேற்படி சாலையைச் சீரமைத்து, தார்ச் சாலையாக மாற்றுவதற்கு, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை அல்லது வேறு எந்தத் துறையிடமிருந்தும் இதுவரை முறையான விண்ணப்பங்கள் எங்களுக்கு வரப்படவில்லை. அப்படி முறையான விண்ணப்பத்தை எங்களுக்குக் கொடுத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மைய அரசினுடைய முன்அனுமதியைப் பெற்று அந்தச் சாலையைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 400, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

400—

பாலம் கட்டுதல்

***19759—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, செருதூர்—வேளாங்கண்ணி சாலை, வெள்ளையாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?